# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • ஆகஸ்ட் 14, 2021 Weekly E-paper • August 14, 2021



# தமிழ்நாடு அரசின் நிதி நிலைத் திட்ட அறிக்கை

• சாரதாதேவி

## இதரப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்

மா.உதயகுமார்

## ஜனநாயகத் தலை குனிவு!

தலையங்கம்

## அடுத்த அடி எடுத்து வைக்கும் திராவிடப் பள்ளி!

சுப.வீரபாண்டியன்

●கருஞ்சட்டைத் தமிழர் ●ஆகஸ்ட் 14, 2021

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2052 ●ஆகஸ்ட் 14, 2021 Weekly E-paper ● August 14, 2021

# தமிழ்நாடு அரசின் நிதிநிலைத் திட்ட அறிக்கை

○ சாரதாதேவி

அறிவித்தபடி 13.8.2021 அன்று, தமிழ்நாடு அரசின் 2021-22 நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விவசாய நிதிநிலை அறிக்கை 14.8.2021 அன்று தாக்கல் செய்யப்படும். நிதிநிலை அறிக்கை குறித்தான விவாதங்கள் அதன் பின்னர் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு அரசின் முதல் மின்னனு நிதிநிலை அறிக்கை இது. இந்த நிதி ஆண்டில் வருவாய் ரூ.2,60,409 கோடியாகவும் செலவினம் ரூ.2,61,188 கோடியாகவும், வருவாய்ப் பற்றாக்குறை ரூ.58,692 கோடி இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டின் எஞ்சிய 6 மாதங்களுக்கு இந்த அறிவிக்கை பொருந்தும்.



பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன்

## வெள்ளை அறிக்கை

கடந்த 21.6.2021 அன்று கவர்னர் உரையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் படி, தமிழ்நாட்டின் நிதிநிலைமையை விவரிக்கும் வெள்ளை அறிக்கை ,பட்ஜெட் தொடருக்கு ஒரு வாரம் முன்னதாக, 09.09.2021 அன்று சென்னைத் தலைமைச் செயலகத்தில் வெளியிடப்பட்டது. நிதியமைச்சர் திரு. பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் 126 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையிலேயே மாநிலத்தின் தற்போதைய நிதிநிலையைப் பொதுவெளியில் தெளிவுபடுத்திவிட்டதால் இந்த நிதிநிலை அறிக்கை குறித்து அனைத்து தரப்பிலும் அச்சம் கலந்த ஒரு எதிர்ப்பார்ப்பே இருந்தது.

## நம்பகத்தன்மை

வெள்ளை அறிக்கையை, எதிர்க்கட்சியாக இருந்தபோது கேட்டதை ஒளிவு மறைவின்றி வெளியிடுவது, தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதை நிறைவேற்றுவது, வெளிப்படைத் தன்மையுடைய அரசாக இருப்பது, நமது கடன் நிலை, செலவீனம் மற்றும் முக்கியப் பொது நிறுவனங்களின் நிலையை மக்களிடம் தெரிவிப்பது என்ற 4 காரணங்களுக்காக வெளியிடுவதாகச் சொன்ன நிதி அமைச்சர் ஏறக்குறைய 1.30 மணி நேரம் செய்தியாளர்களைச் சந்தித்து அறிக்கையை விளக்கினார். அதில் இருக்கும் தவறுகளுக்குத் தான் மட்டுமே பொறுப்பு என்றும் அதன் சிறப்புகளுக்கு நிறைய பேரின் உழைப்பு காரணம் என்றும் அவர் கூறியதே இந்த அரசின் மீதான நம்பிக்கையையும் மதிப்பையும் உயர்த்திவிட்டது.

## வருவாய்க் குறைப்பு

2006-11 தி.மு.க ஆட்சியில் உபரியில் இருந்த மாநில வருவாய் அடுத்த இரண்டு ஐந்து ஆண்டுகளில் ரூ.1,55,246 கோடி வருவாய்ப் பற்றாக்குறையாகத் தேய்ந்து போனதைப் பட்டியல் உதவியுடன் அறிக்கை தெளிவுபடுத்தியது. அதுவே நிதிப் பற்றாக்குறை ரூ.2,95,830 கோடிகளாக உள்ளது என்றும் அறிக்கை சொன்னது. வரிகள், கட்டணங்கள் மூலம் அரசுக்கு வருவது வருவாய். நிதி என்பது செலவினங்கள் போக இருக்கும் நிகர வருவாயுடன் கடன் தவணைகள், முதலீட்டு இலாபங்கள், வரவேண்டிய தொகைகள், இன்னும் பிற இழப்புகள் ஆகியவற்றையும் கூட்டிக் கழித்தால் மிஞ்சும் தொகை.

## கடன் தொகை

தமிழ்நாட்டின் மொத்தக் கடன் தொகை ரூ. 5.70 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. 2011ல் ரூ.1.01 லட்சம் கோடியாக இருந்த கடன் 5 மடங்காக அதிகரித்துள்ளது. இன்று ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் ரூ.2.64 லட்சம் கடன் இருப்பதாக அந்த அறிக்கை சுட்டி இருப்பது பொதுமக்களிடத்தில் அதிர்வலையை ஏற்படுத்தி உள்ளது.

இந்தக் கடன் தொகையானது மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்காகவோ, உள்கட்டுமானங்களுக்காகவோ வாங்கப்படவில்லை என்பதுதான் இந்த அறிக்கையின் மிக முக்கிய விவரம். இந்தக் கடன்கள் யாவும் மாநில வருவாய்க்குள் எட்டப்படவேண்டிய செலவுகளான ஊதியங்கள், வட்டிகள் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பது, அரசின் நிர்வாகக் கோளாறுகளை, திறமின்மையைப் பறைசாற்றுவதாக உள்ளன என்றும் நிதி அமைச்சர் தெரிவித்தார். 2013 முதல் 2020 வரை ஏற்பட்டுள்ள இந்தச் சரிவுகளை அடுத்த ஐந்து ஆண்டுகளில் தற்போதைய அரசு சரி செய்யும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

## நிதிநிலை திட்ட அறிக்கை

இன்றைய அறிக்கை அனைத்துத் தரப்பினரின் அச்சத்தைப் போக்கும் வகையிலும் சில எதிர்பார்ப்புகளை நிலுவையிலும் வைத்திருந்ததையே நிபுணர்கள் பல்வேறு ஊடகங்களில் குறிப்பிட்டனர். முக்கிய அறிவிப்புகள்:

தொடர்ச்சி அடுத்தப் பக்கம்...

## முன்பக்கத் தொடர்ச்சி...

| எதற்கு | எவ்வளவு (ரூ.கோடிகளில்) |
|---|---|
| பள்ளிக் கல்வி | 32599.54 |
| உயர்கல்வி | 5369.09 |
| மருத்துவம், குடும்ப நலம் | 18933.20 |
| வீடு தேடி மருத்துவம் | 257.16 |
| மின்சாரம் | 19872.22 |
| நெடுஞ்சாலைகள் | 17899.17 |
| ஆதி திராவிடர் பழங்குடியினர் | 4142.33 |
| சுய உதவிக்குழுக் கடன் தள்ளுபடி | 2756 |
| மாற்றுப்பாலின ஓய்வூதியம் | 1.50 |
| நீர் நிலை சீரமைப்பு | 610 |
| நகர்ப்புற சீரமைப்பு | 1450 |
| 1000 புதிய பேருந்துகள் | 623.59 |
| பாசனம் | 6607.17 |
| காவல் துறை | 8930.20 |
| பெட்ரோல் விலை குறைப்பு | 1160 |
| தமிழ் வளர்ச்சி | 80 |

இது மட்டுமல்லாமல் பன்னிரண்டு மாதப் பேறுகால விடுப்பு, கூடுதல் சிப்காட் வளாகங்கள், டைடல் பூங்காக்கள், 8 லட்சம் கிராமப்புற ஏழைக் குடும்பங்களுக்கு வீடு, நூறு நாள் வேலைக்கு ரூ.300/- நாள் ஊதியம் ஆகிய அறிவிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

நகைக் கடன் தள்ளுபடி, மற்றும் இல்லத்தரசிகளுக்கு மாதாந்திர உரிமைத் தொகை ஆகியவற்றுக்கு விவரங்கள் திரட்டும் பணி நடப்பதாக அறிவித்திருப்பதும் வெள்ளை அறிக்கையைக் காரணமாக்கி இந்த அரசு வாக்குறுதிகளைத் தள்ளிப்போடுமோ என்ற அச்சத்தை நீக்கி உள்ளது.

### எதிர்மறைக் கருத்துகள்

வழக்கமாக எதிர்க் கட்சிகள் சொல்லும் “வெற்று பட்ஜெட்”, “எதிர்பார்த்தவை இல்லை” போன்ற அண்ணாமலைத்தனமான விமர்சனங்களைக் கடந்து இது விலையேற்றத்திற்கான முன்னறிவிப்பு என்று வெள்ளை அறிக்கையையும் முன்னாள் அமைச்சர் ஜெயகுமார் சாடி உள்ளார்.

எனினும் சிறு குறு தொழில் முனைவோருக்கான கடனுதவிகளோ, மான்யங்களோ, கடன் தவணை விடுப்போ இல்லை என்று சில வல்லுனர்களின் விமர்சனங்களும், கல்விக் கடன் தள்ளுபடி குறித்த அறிவிப்புகள் இல்லை என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளன.

### ஒளிமயமான எதிர்காலம்

அடுத்த ஒரு மாத காலம் நடைபெறும் கூட்டத் தொடரில் சில நியாயமான எதிர்பார்ப்புகளுக்குப் பதில்கள் இருக்கலாம். மொத்தத்தில் இந்த நிதித் திட்ட அறிக்கை தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடிநபர் மீதும் உள்ள ரூ.1,10,000/- கடனை ஒழித்து, ஒவ்வொரு நாளும் தமிழ்நாடு செலுத்த வேண்டிய ரூ.87.31கோடி வட்டியிலிருந்தும் அதற்காக மேலும் கடன் வாங்குவது என்று இருக்கும் தற்போதைய நிலையிலிருந்து மாநிலத்தைப் பாதுகாப்பது என்ற இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும். அதை ஏழை எளிய மக்களைப் பாதிக்காத வண்ணமும், தமிழ்நாட்டின் மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றை இழக்காமலும் அடைவதே ஒளிமயமான எதிர்காலத்தை உறுதிப் படுத்தும் ●

# இதரப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்

● மா.உதயகுமார்

இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைக் கண்டறிந்து பட்டியல் தயாரிக்க மாநில அரசுக்கு மீண்டும் அதிகாரம் அளிக்கும் 127ஆவது சட்ட திருத்த மசோதா மக்களவையிலும் மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்திருத்தம் நிறைவேறியிருப்பது கூட்டாட்சித் தத்துவத்திற்குக் கிடைத்த வெற்றி என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளதைப் போல தமிழ்நாடு, மகாரஷ்ட்ரா போன்ற மாநிலங்களின் தொடர் அழுத்தத்தால்தான் மாநிலங்களுக்கு மீண்டும் இந்த அதிகாரம் கிடைத்திருக்கிறது. அனைத்து அதிகாரங்களையும் ஒன்றிய அரசே எடுத்துக்கொண்டு போகும் சூழலில், ஒன்றிய அரசிடமிருந்து அதிகாரம் மாநிலங்களுக்கு வருவது என்பதற்கு, கூட்டாட்சி மலர்வதற்கு திமுக போன்ற கட்சிகள் மேற்கொள்ளும் தொடர் போராட்டங்களே அடிப்படையானவை ஆகும். பல்வேறு தேசிய இனங்கள் வாழும் இந்தியா போன்ற நாட்டில், அனைத்து மாநிலங்களிலும் இருக்கும் இதர பிற்படுத்தப்பட்டோர் பட்டியலைத் தயாரிக்க ஒன்றிய அரசு நினைப்பது, பிற்படுத்தப்பட்டோர் சமூக முன்னேற்றம் அடைய பெரும் தடைக்கல்லாக இருக்கும். இன்று அந்தத் தடைக்கற்கள் தகர்க்கப்பட்டு மாநிலங்கள் அவ்வுரிமையை பெரும் வகையில் இச்சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. விரைவில் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததும் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அண்மையில் மருத்துவக் கல்வியில் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27% இடஒதுக்கீட்டை ஒன்றிய அரசு அறிவித்ததும், இன்று செய்யப்பட்டிருக்கும் இந்தச் சட்டத்திருத்தம் என்பதிலும் திமுகவின் பங்கு என்பது முதன்மையானது ஆகும்.

இச்சட்டத் திருத்த மசோதாவைத் தொடர்ந்து, மண்டல் வழக்கு அதாவது இந்திரா-சஹானி வழக்கில், இடஒதுக்கீட்டிற்கு உச்ச நீதிமன்றம் விதித்த 50 சதவீத உச்சவரம்பு என்பது நீக்கப்பட வேண்டும் என்று இன்று அனைத்துக் கட்சிகளும் குரல் கொடுத்து வருகின்றன. ஆனால் திராவிட இயக்கம் முன்னெடுக்கும் சமூக நீதி என்பது நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தெளிவாகப் பார்ப்பனர் அல்லாதார் அறிக்கையாகச் (Non Brahmin Manifesto) சொல்லப்பட்டது. தொடர்ந்து நீதிக்கட்சி ஆட்சியில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் (Communal G.O) நடைமுறைப்படுத்தப்பட்டது. இன்று, சமூக நீதியை நிலைநாட்ட, அனைத்துச் சாதியினருக்குமானப் பிரதிநிதித்துவத்தின் இன்றியமையாமையை ஓரளவுக்கு மற்ற மாநிலங்களும் கட்சிகளும் உணர்ந்திருக்கின்றன.

ஆனால் இந்திய அரசியலமைப்பின் சட்டம் 16, உட்பிரிவு 4 இன் படி ‘adequate representation’ அதாவது போதிய அளவிற்கானப் பிரதிநிதித்துவம் என்கிற அளவுகோலே இடம்பெற்றிருக்கிறது. இது ‘proportional representation’ அதாவது விகிதாச்சார அடிப்படையிலான பிரதிநிதித்துவம் என்று மாற்றப்படும்போதுதான் அனைத்துச் சாதிகளிலும் உரிமை மறுக்கப்பட்டு காலங்காலமாக சமூகஅநீதிக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் அவர்கள் உரிமைகளைப் பெற முடியும். அந்த சட்டத்திருத்தம் செய்யப்படும் வரலாற்றையும் திராவிட இயக்கமே நிகழ்த்தும்! ●

## மகளிர் தங்கும் விடுதிகள்

சென்னையில் 800 படுக்கை வசதிகளுடன் கூடிய மகளிர் தங்கும் விடுதிகள் அமைக்க ஆயத்தப்பணிகள் நடைபெறுவதாகத் தமிழ்நாடு சமூக நல வாரியம் அறிவித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கச் செயற்பாடாகும். தனித்து வாழ விரும்பும் பெண்களுக்கு இது பாதுகாப்பான அமைப்பாக இருக்கும். குடும்ப அமைப்பிலிருந்து வெளியேறி சுதந்திரமாக வாழ விரும்பும் பெண்களுக்கானக் கட்டமைப்பை உருவாக்குவதைச் சமூக கடமையாகக் கருதி தமிழ்நாடு அரசு முன்மாதிரியான இத்திட்டத்தை முன்னெடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. முறையானப் பராமரிப்பு வசதியுடன் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் தங்கும் விடுதிகளைத் தி.மு.கழக அரசு நடைமுறைப்படுத்தும் என்ற நம்பிக்கை வலுப்பெறுகிறது.


## கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடு




தலைவர் கலைஞரிடம், உங்களுக்கு மிகவும் பிடித்த அய்ந்து புத்தகங்கள் என்னவென்று ஒரு நிருபர் கேட்டபோது கலைஞர் சொன்ன அந்த அய்ந்து புத்தகங்களில் அறிஞர் அண்ணா எழுதிய " பணத்தோட்டமும் " ஒன்று.

திராவிட இயக்கத்தின் பொருளாதாரக் கோட்பாட்டைத் தெரிந்து கொள்ளவும், குஜராத்தி பனியாக்கள், ராஜஸ்தான் மார்வாரிகளின் பொருளாதாரமாகத்தான் இந்தியப் பொருளாதாரம் முழுக்க இருக்கிறது - இயங்குகிறது என்பதை அறிந்துகொள்ளவும் பணத்தோட்டம் புத்தகம் பேருதவி புரியும்.

இதன் தொடர்ச்சியாக அண்ணாவின் "ஆரியமாயை ", "சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் ", "நீதி தேவன் மயக்கம்" -ஆகிய மூன்று நூல்களையும் ஒரே புத்தகமாக வடிவமைத்து அச்சில் உள்ளது. தோழர்கள் புத்தகங்களை வாங்கிப் படித்துப் பயன் பெற வேண்டுகிறேன்.

இன்று, கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் வெளியீடாக அறிஞர் அண்ணாவின் "பணத்தோட்டம்" - கருஞ்சட்டை அலுவலகத்தில் விற்பனையில் உள்ளது. உங்கள் படிப்பார்வமும், நூல்கள் வாங்கும் ஆர்வமும் இன்னும் அதிக அளவில் புத்தகங்களைக் கொண்டு வர ஊக்கம் கொடுக்கும்.

தோழமையுடன்
'பெல்' இராஜன், இயக்குநர்

கருஞ்சட்டைப் பதிப்பகம்,
122. என். டி ஆர். தெரு, ரங்கராஜபுரம், சென்னை - 600 024. தொலைபேசி : 044-24726408


தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஜனநாயகத் தலை குனிவு!

இந்திய ஒன்றியத்தின் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் ஜூலை 19 அன்று கூடி நிறைவடைந்திருக்கிறது.

இக்கூட்டத் தொடரில் "அனைத்துப் பிரச்சனைகளையும்" அவையில் பேசிக் கொள்ளலாம் என்று பிரதமர் மோடியும், சபாநாயகர் ஓம்பிர்லாவும் எதிர்க்கட்சித் தலைவர்களிடம் உறுதியளித்தார்கள்.

அதன்படி நாட்டின் மிக முக்கியப் பிரச்சனைகளான பெகாசஸ்ஒட்டுக்கேட்பு,வேளாண் சட்டம் உள்ளிட்டவைகள் குறித்துப் பேச வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் வேண்டுகோள் அவை தொடக்கத்திலேயே மறுக்கப்பட்டது.

அன்று அவையில் மோடி பேசும் போது, தங்கள் கோரிக்கைகளை விவாதிக்க எதிர்க்கட்சிகள் குரல் கொடுக்கத் தொடங்கினர். இந்தக் குரல்கள் ஓங்கி ஒலித்ததால் அதை "கூச்சல், குழப்பம்" என்று எதிர்கட்சிகளை ஊடகங்கள் சொல்லின. முக்கியத்துவமான அந்த பிரச்சனைகளைப் பேச எதிர்க்கட்சிகளை அனுமதித்து இருந்தால் இத்தகைய குழப்பமான விளைவுகள் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை.

ஒன்றியத்தின் பிரதமரும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் அப்போது அவையில் வாய்மூடி அமைதியாக இருந்தனர் என்பதே ஐயத்தை ஏற்படுத்துகிறது. மடியில் கனமிருந்தால் பயம் இருக்கத்தானே செய்யும் !

அவை கூச்சல்,குழப்பங்களால் தடுமாறிக்கொண்டிருக்கும் போது கூட, எதிர்க்கட்சிகளின் கருத்துகளைக் கேட்காமல், விவாதங்கள் நடத்தாமல் பா.ஜ.க அரசுக்குச் சாதகமானப் பல சட்ட மசோதாக்கள் குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேறியதாக அறிவித்து இருக்கிறார்கள்.

எடுத்துக் காட்டாக அத்தியாவசியப் பாதுகாப்புச் சேவை சட்ட மசோதாவைச் சொல்லலாம்.

இச்சட்ட முன்வடிவின்படிப் பல தொழிற்சாலைகளைத் தனியாரிடம் விற்பனை செய்ய முடியும். தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்தினால் அவர்களுக்கு அபராதம் விதிக்கவும், சிறைத் தண்டனை கொடுக்கவும் முடியும். இது போன்ற மசோதாக்கள் அவையில் விவாதிக்காமல் நிறைவேறியதாக அறிவிப்பது ஜனநாயகத்திற்கு எதிரானது.

அவையில் இரண்டு பெண் உறுப்பினர்கள், அவைக் காவலர்களால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி கூறியிருப்பது மிகுந்த கவலையைத் தருகிறது. திட்டமிடப்பட்ட நாள்களுக்கு இரண்டு நாள்கள் முன்பே அவையைத் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்ததனால், அவைக்கு வெளியே மக்கள் மத்தியில் போராட்டம் செல்கிறது.

அமைதியாக நடைபெற வேண்டிய மக்களவை, மாநிலங்களைவைகளின் அமைதி குலையக் காரணமான பா.ஜ.க அரசின் நாடாளுமன்ற நடவடிக்கை, ஜனநாயகத்திற்குத் தலை குனிவை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்,
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

# அடுத்த அடி எடுத்து வைக்கும் திராவிடப் பள்ளி!

○ சுப.வீரபாண்டியன்

*திராவிடப் பள்ளியின் அடுத்த ஆண்டிற்கான கதவுகள் திறக்கின்றன!*

சென்ற ஆண்டு, தந்தை பெரியார் பிறந்தநாளில், நம் திராவிடப்பள்ளியை, அன்பிற்குரிய திமு கழகத் தலைவர், இன்றைய தமிழ் நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் இணைய வழியில் தொடக்கி வைத்தார். அன்றும், இன்றும் கொரோனாப் பெருந்தொற்று உலகைச் சூழ்ந்தே நிற்கிறது. அத்தொற்றுக்கிடையில்தான், பள்ளியைத் தொடங்கி, ஓராண்டையும் நிறைவு செய்திருக்கிறோம்!




ஆண்டுக்கு 300 மாணவர்கள் என்று திட்டமிட்டோம். ஆனால், அதனினும் கூடுதலாய் நம்மை நோக்கி ஆர்வத்துடன் வந்தவர்களைத் தடுக்க முடியவில்லை. முதலாண்டில் 516 நண்பர்கள் பள்ளியில் இணைந்தனர்.

தொடக்க நிலை, இடை நிலை, முதுநிலை என மூன்று நிலைகளில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தொடக்க நிலையில்தான் மிகுதியானவர்கள் இணைந்தனர். அவ்வாறு தொடக்க நிலையில் இணைந்த முன்னூறுக்கும் மேற்பட்டவர்களில், பெரும்பான்மையானவர்கள் அரசியல் தளத்திற்கு வெளியில் நின்றவர்களாகவும், இளைஞர்களாகவும் இருந்தமை கண்டு மகிழ்ந்தோம். நம் நோக்கம் அதுதான்.

அடுத்தடுத்த தலைமுறையினரைத் திராவிட இயக்கம் நோக்கி அழைத்து வருவதே திராவிடப்பள்ளியின் தலையாய எண்ணம் என்பதால், புதுப்புனலின் வருகை, நமக்குத் பேருவகை ஆயிற்று. சற்றொப்ப 40 பேர் வெளிநாட்டினர். அதுவும் மகிழ்ச்சியே!

திராவிட இயக்கத்தின் வரலாறு, கோட்பாடுகள், தாக்கம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு பாட நூல்கள் தயாராயின. எங்களின் வேண்டுகோளை ஏற்று, பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், திராவிட இயக்க ஆய்வாளர்கள், திராவிட இயக்க முன்னோடிகள் எனப் பலரும் உரிய பாட நூல்களை எழுதித் தந்தார்கள். இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை இணைய வகுப்புகளும் நடந்தன.

ஓராண்டு நிறைவு பெற்ற வேளையில், கடந்த 8 ஆம் நாள் (08.08.2021) மூன்று நிலையினருக்கும் தேர்வுகள் நடத்தப்பெற்றன. ஆர்வத்துடன் பள்ளியில் இணைந்தனர் என்றாலும், அவர்களுள் எத்தனை பேர் தேர்வுகளை எழுதுவார்களோ என்ற ஐயம் எங்களுக்கு இருந்தது, இந்தத் தேர்வை எழுதி வெற்றி பெறுவதனால் என்ன பயன் என்று கருதி எழுதாமல் விட்டுவிடுவார்களோ என்ற கவலை இருக்கவே செய்தது. ஆனால் எங்கள் கவலையைப் பொய்யாக்கி, ஏறத்தாழ 300 பேர், குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் தேர்வு எழுதியுள்ளனர் என்பது பள்ளிக்குப் பெருமை சேர்க்கிறது.

முறையாகப் பாடத்திட்டங்களை வகுத்து, உரியவர்களிடம் எழுதி வாங்கி, அச்சிட்டு, அனைவருக்கும் அஞ்சல் வழியிலும், இணைய வழியிலும் அனுப்பிவைத்து, சென்று சேர்ந்து விட்டதா என்று சரி பார்த்து, இறுதியாக வினாத்தாள்களைத் தயாரித்து, தேர்வையும் நடத்தியுள்ள திராவிடப்பள்ளியின் ஒருங்கிணைப்பாளர்களின் பணி மிகப் பெரியது.

ஓரிருவர் செய்துவிடக் கூடிய பணியன்று இது! தலைமை ஒருங்கிணைப்பாளர் தோழர் மா. உமாபதி வழிகாட்டலில், முப்பதுக்கும் மேற்பட்டப் பேரவைத் தோழர்கள் குழுக்களாகப் பிரிந்து இப்பணியைச் சிறப்புற ஆற்றி முடித்துள்ளனர். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நம் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகிறேன்.

இப்போது தேர்வுத்தாள்களைத் திருத்தும் பணி தொடங்கியுள்ளது. தேர்வு எழுதிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். சிறப்பாக எழுதிக் கூடுதல் மதிப்பெண் பெற்றுள்ள சிலருக்கு, வரும் செப்டம்பர் மாதம், பெரியார் பிறந்த நாளையொட்டி நடைபெறவிருக்கும் விழாவில், மேடையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இப்போது இரண்டாம் ஆண்டிற்கான கதவுகள் திறக்கப்படுகின்றன. இந்த ஆண்டு, திராவிடப்பள்ளியில் சேர விரும்புவோர் ஆகஸ்ட் 15 ஆம் நாள் முதல் தங்களின் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம். www.dravidapalli.com என்னும் இணையத்தளத்தில் உள்ள படிவங்களைப் பதிவிறக்கம் செய்து, முழுமையாக நிரப்பி, அஞ்சல் மூலமாகத் திராவிடப்பள்ளி முகவரிக்கு அனுப்பிவைத்திட வேண்டும்.

இவ்வாண்டு, தொடக்க நிலை, முதுநிலை என இரண்டு நிலைகள் மட்டுமே உள்ளன. தொடக்க நிலைப் பாடங்கள், வினா-விடை வடிவத்தில் எளிமையான அறிமுகமாக இருக்கும். முதுநிலைப் பாடங்கள், சற்று விரிவாகவும், விவாதங்களாகவும், ஆய்வு நோக்கோடும் அமைந்திருக்கும்.

ஓராண்டுக் கட்டணம் ரூ.1200/. விண்ணப்பிக்க இறுதி நாள் – ஆகஸ்ட் 31.

வாருங்கள் நண்பர்களே, திராவிடப் பள்ளியில் இணைந்து படியுங்கள், திராவிட இயக்கத்தைப் பரப்புங்கள்! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian